
# மனீஷா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்

நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | மனீஷா பஞ்சகம் |
| **ஆசிரியர்** | : | ப்ரக்ஞன் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **வகை** | : | விழிப்புணர்வு |
| **முதற்பதிப்பு** | : | 2023 |
| **பக்கங்கள்** | : | 50 |
| **விலை** | : | அக விழிப்பு |
| **கணினி அச்சு** | : | ஓம் கிராபிக்ஸ் |

# மனீஷா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

தெளிவுரை

## ப்ரக்ருன்

# மனீஷா பஞ்சகம்

## (ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)

ஆதி சங்கரர் அருளிய பல்வேறு படைப்புகளில் **"மனீஷா பஞ்சகம்"** முக்கியமான ஒன்றாகும். சாதி அபிமானத் தியாகம் (சாதி துவேஷம் இல்லாமல் இருப்பது) என்ற பண்பு அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒன்று என்பதை உணர்த்தும் படைப்பாகும்.

**"பஞ்சகம்"** என்றால் ஐந்து பொருட்களின் சேர்க்கை என்று அர்த்தம். சமஸ்கிருத மொழியில் **'மனீஷா'** என்றால் நிச்சயமான அறிவு(ஞானம்) என்று பொருள். நம்பிக்கையினாலோ, கொள்கையினாலோ அல்லாமல், ஒரு உயர்ந்த அறிவுக்கருவியின் மூலம் ஐயமின்றி ஏற்படும் உறுதியான அறிவே **"மனீஷா"** எனப்படும். இந்த நிச்சய அறிவை விளக்கும் ஐந்து ஸ்லோகங்களே **"மனீஷா பஞ்சகம்"** எனப்படுகின்றன.

இந்த மனீஷா பஞ்சகம் உருவாவதற்கு வழிவகுத்த சம்பவம் மிகவும் முக்கியமானது. ஏனெனில் அந்தச் சம்பவமே சாதி அபிமானத் தியாகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்த வல்லது.

ஒரு நாள் ஸ்ரீசங்கரர் காசியில் கங்கையில் நீராடிவிட்டு தன் சீடர்களுடன் குறுகிய பாதை ஒன்றில் சென்று கொண்டிருக்க, சற்றுத் தொலைவில் அக்காலத்தில் தீண்டத்தகாதவராக கருதப்பட்ட புலையன் ஒருவர் நாய்களோடு வந்து கொண்டிருந்தார்.

அவருக்குப் பரிவாரங்களாக நான்கு வேட்டை நாய்கள் சங்கரருக்கு மிக அருகில் வந்து விட்டதை உணர்ந்த சங்கரரின் சீடர்கள் அந்த புலையனைப் பார்த்து **“விலகிப்போ.. விலகிப் போ..”** என்று ஒதுங்கி வழி விடச் சொன்னார்கள்.

ஜாதி பேதங்களால், தீண்டாமை என்னும் தீய நோய் பரவி இருந்தகாலம் அது. சீடர்களின் இந்தச் செயலுக்கு அவர்களது குருவே காரணம் எனக்கண்ட அந்த புலையன் துணிந்து சங்கரரிடம் கேட்கிறார்.

அன்னமயாதன்னமயம் அதவா சைதன்யமேவ சைதன்யாத் |
யதிவர தூரீகர்த்தும் வாஞ்சஸி கிம் ப்ரூஹி கச்ச கச்சேதி ||

துறவிகளில் மேலானவரே! தாங்கள் விலகிப்போ! என்று கூறியது இந்த உடலையா?

அப்படியென்றால், என்னுடைய உடலும் மலம், சிறுநீர் போன்ற சோற்றால் ஆன ஒரு ஜடம், தங்களுடைய உடலும் சோற்றால் ஆன ஒரு ஜடம், ஒரு ஜடத்திலிருந்து இன்னொரு ஜடம் எப்படி விலகும்?

அல்லது தாங்கள் விலகிப் போ என்று கூறியது இந்த உடலுக்குள் இருக்கும் சைதன்யத்தையா?

சைதன்யமான ஆத்மா எனக்குள்ளும், உங்களுக்குள்ளும், எங்கும் பரவியுள்ளதே, அது எப்படி விலகிப் போக முடியும்? எனவே, தாங்கள் விலகிப் போ! என்று எதைக் கூறினீர்கள்?



மேலும்அவர் தொடர்ந்தார்.

கிம் கிம்கங்காம்புனி பிம்பிதே அம்பரமணௌ சண்டாலவாடீபய:
புரே சாந்தரமஸ்தி காஞ்சனகடீ ம்ருத்கும்பயோர்வாம்பரே |
ப்ரத்யக்வஸ்துனி நிஸ்தரங்க ஸஹஜாநந்தாவ போதாம்புதௌ |
விப்ரோயம் ஸ்வபசோயமித்யபி மஹான் கோயம் விபேதப்ரம: ||

"கதிரவனின் பிம்பம் கங்கையிலும் விழுகிறது, சாக்கடையிலும் விழுகிறது, இதனால் கதிரவனுக்கு இழுக்கு ஏற்படுவது இல்லையே? மேலும் பரந்து விரிந்து கிடக்கும் ஆகாயம் மண் பானைக்குள் இருந்தாலும் சரி, பொன் பானைக்குள் இருந்தாலும் சரி, ஆகாயம் வேறுபடுவதில்லையே?

இந்த அறிவை தாங்கள் அறிந்திருக்கக் கூடுமே, அப்படி இருந்தும் ஏன் உங்களையும் என்னையும் பேதப்படுத்தி விலகிப் போ என்று கூறினீர்கள்?"

மேற்கூறிய கேள்விகளைக் கேட்டவுடன், சங்கரர் எவ்விதச் செருக்கும் இல்லாமல், அந்த நொடியிலேயே அப்புலையனிடம் பணிந்து **"**அத்வைத அறிவில் நிலைத்து நிற்கும் தாங்களே என் குரு**"** என்று வணங்கி "**மனீஷா பஞ்சகம்**" எனும் படைப்பை அருளினார்.

பாரத பூமியெங்கும் பாகுபாட்டால் சமுதாயம் பிளவுபட்டு இருந்தகாலம் அது. மத ரீதியான குழப்பங்கள் உச்சத்தில் இருந்த ஒரு கால கட்டத்தில் பிறப்பால் பேதம் காணும் ஜாதிப்பாகுபாட்டினால் தீண்டாமை என்ற கத்தி சமுதாயத்தை துண்டு போட்டுக் கொண்டிருந்த காலத்தில் சங்கரரின் வருகை நிகழ்ந்தது.

தவறான சிந்தாந்தங்களைப் பரப்பி மக்களை திசை திருப்பும் முயற்சிகள் நடைபெற்று வந்த வேளை அது.

குறிப்பாக பாரத நாட்டில் பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதும் ஜாதிபேதம் வேதங்களின் உண்மைத் தன்மையை அறியாத சிலமூடர்களால் பரப்பப்பட்டு இன்றுவரை ஆழமாக வேறூன்றி இருக்கின்றது.

இத்தகைய பேதங்களை களையவும், வேதங்களின் உண்மைத் தன்மையை உலகிற்கு உரைக்கவும், உபநிடதங்களின் உண்மைகளை உலகறியச் செய்யவும், வரும்காலம் ஜாதி, மத பேதமற்ற சமுதாயம் உருவாகவும் பாடுபட்டவர்களில் ஆதிசங்கரரும் ஒருவர் ஆவார்.

அவ்வகையிலே இந்த மனிஷா பஞ்சகத்தில் ஜாதித் துவேஷத்தை களைய வேண்டும் என்பதும் முக்கியமான நீதி.

“சூத்ரன்” என்ற சொல்லினால் பிறவியில் கீழ்ப்பட்டவனாகவும், “பிராமணன்” என்ற சொல்லினால் பிறப்பால் உயர்ந்தவன் என்றும் மனிதர்களைப் பிரித்துள்ளது இந்த வேதம் என்பதை யாரோ சில தகாதவர்களால் பிரச்சாரம் செய்யப்பட்டு உண்மைக்கு புறம்பாக வேதத்தின் கருத்தை அறியாத மூடர்களால் பரப்பப்பட்டு வந்துள்ளது.

ஒவ்வொரு மனிதனையும் ‘நீயே அதுவாக இருக்கின்றாய்’ என்று கூறும் வேதமா இதுப் போன்ற ஜாதிப் பிரிவினையை உருவாக்கி இருக்கும்.
சற்றே யோசியுங்கள்!

நீயே எதுவாக இருக்கின்றாய்? என்று வேதம் கூறுகின்றது?

எல்லையற்ற அந்த பரமாத்மாவும், இந்த உடல் என்ற எல்லைக்குள் இருக்கும் ஜீவாத்மாவும் ஒன்றுதான் என்று கூறும் வேதமா இப்படி மனிதர்களை ஜாதி வாரியாகப் பிரித்து இருக்க முடியும்?...

இதுப்போன்ற அறியாமையை தகர்த்தெறியவே ஆதிசங்கரர் புலையனுடன் நடத்திய நாடகமே இந்த மனிஷா பஞ்சகம் உருவாகக் காரணமாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

வேதங்கள் உண்மைக்கு புறம்பாக எதனையும் கூறவில்லை. வேதத்தை அரை குறையாகப் படித்து விட்டு தன்னுடைய மனம் போன போக்கில் அறியாமை ஜனங்களிடம் தவறான விளக்கங்கள் கொடுத்து கற்பித்த கற்பனையே இந்த பாகுபாடு.

உலகில் உள்ள எல்லா மனிதர்களையும் பிறப்பால் சமத்துவமாகவும், பின் அவர்கள் ஏற்று வாழும் வாழ்க்கையை வைத்து மூன்று விதமாக

அடையாளம் காட்டுகின்ற வேத மந்திரம் மனிதர்களை நான்கு பிரிவாக அமைக்கின்றது.

**ஜன்மநாஜாயதேஷூத்ர: கர்மணாஜாயதேத்விஜ: |**
**வேதாத்யாயிபவேதிப்ரோப்ரஹ்மாஜானாதிபிராஹ்மண: ||**

இதன் அர்த்தம் என்ன? பிறப்பில் எல்லா மனிதர்களும் சூத்ரர்களாகவே பிறக்கின்றார்கள்.

அதாவது சூத்ரன் என்பவன் தக்கது எது?, தகாதது எது? என்ற அறியாமையினால் கட்டுப்பாடுகளற்ற, உடலும், மனமும் வேண்டு பவைகளை எல்லாம் வேண்டும் போது, தன்மனம் போன போக்கில் செய்துக் கொண்டிருப்பவன்.

பிறந்த குழந்தைகள் எல்லாம் இதுப் போல இருப்பதால் நாம் எல்லாருமே சூத்திரர்களாகவே பிறக்கிறோம் என்பது இங்கு கூறவரும் கருத்து.

ஆதலால் பிறப்பில் அனைவரும் சமமே! என்பதை நன்கு அறிய வேண்டும்.

இவ்வாறு சமமாகப் பிறந்தவன் தான்கற்கும் கல்வியின் மூலம் எது தக்கது?, எது தகாதது? என்பதை அறியும் அறிவே அவனை சூத்திரனிலிருந்து மாற்றத்திற்கு கொண்டு செல்கின்றது.

இந்த மாற்றம் முக்கியம் என்பதால் இதனை மறு பிறப்பாகவே நம் சான்றோர்கள் கருதினர்.

அதனாலேயே, கல்வித் தொடக்கம் ஏற்று கற்க வேண்டிய உண்மையான கல்வியைக் கற்றுத் தேர்ந்து, அந்த கற்ற கல்வியின் படி நின்று, தருமப்படி வாழ்பவர்களை சூத்திரர்களிலிருந்து வேறுபடுத்தி 'த்விஜர்' என்று அழைப்பர்.

அதாவது, 'த்வி' என்றால் இரண்டு, 'ஜ' என்றால் ஜன்மம். ஆக, இரண்டு முறை பிறந்தவன் என்று அழைப்பர்.

அன்றைய காலங்களில் குருகுலக் கல்வியின் வாயிலாக அனைத்து தரப்பினருமே ஒன்றாகக் கல்வி பயின்றனர். சாதாரணமானவனிலிருந்து, அரசகுமாரன் வரை அனைவருக்கும் ஒரே மாதிரியான 64 கலை களுடன் கூடிய கல்வி கற்பிக்கப்பட்டன.

நல்லது எது?, தீயது எது? என்ற அறிவை அறிந்து, தான் ஏற்ற தொழிலுக்கும், வாழ்க்கை முறைக்கும் ஏற்ற தருமப்படி வாழ்கின்ற துவிஜர்கள் சிலர், இதனினும் மேலே உயரும் பொருட்டு, வேதங்களின் உண்மைகளை ஆராய்ந்துணரவும், அதன்படி தான் எடுத்துக் கொண்ட தருமத்திற்கேற்ப நடந்து, வேத விதிகளின்படி, ஆன்ம ஞானமே குறிக்கோளாக ஏற்று தங்கள் வாழ்க்கை முறைகளை

மாற்றிக் கொள்பவர்களை **‘விப்ரர்’** என்று அழைக்கப் படுகின்றனர்.

இந்த விப்ரர்களே தீர்க்கமான அறிவாலும், யோகத்தாலும் ஆன்ம விசாரனையில் பலனை அடைந்து **‘பிரஹ்மம்’** என்ற பரமார்த்த ஞானத்தை அடைந்தவர்கள் எவரோ அவர்களே **‘பிராஹ்மணர்கள்’** என்று அழைக்கப்பட்டனர்.

அதாவது, பிரஹ்ம ஞானத்தை அடைந்தவன் **‘பிராமணன்’** என்று அழைக்கப்படுகின்றான்.

பிறப்பினாலோ, வேதங்களை படிப்பதினாலோ, முற்றுப் பெறாத கல்வியினாலோ, அல்லது வெளி வேடத்தினாலோ ஒருவன் **விப்ரன்** என்றோ, பிராஹ்மணன் என்றோ கருதப்பட மாட்டாது.

பிறந்த குழந்தைகள் அனைவரும் பிறப்பால் சமமே, அவர்களே தாங்கள் கற்கும் கல்வியின் அடிப்படையில் அவர்களது வாழ்க்கை முறை எப்படி மாற்றத்தை அடைகின்றதோ அதற்கேற்ப அவர்கள் **‘த்விஜன்’**, **‘விப்ரன்’**, **‘பிராஹ்மணன்’** என்று ஏற்று வாழ்ந்து வந்தனர்.

ஆகவே, வேத சாஸ்திரத்தின் படி ஒருவன் பிறப்பால் த்விஜனாகவோ, விப்ரனாகவோ, அல்லது பிராஹ்மணனாகவோ என்றுமே இல்லை.

நல்ல நடத்தையினாலும், தான் ஏற்ற கர்ம, தர்ம நியாயங்களினாலும், எல்லாக் குழந்தைகளும் த்விஜன், விப்ரன், பிராஹ்மணன் என்ற மாற்றத்தை விரும்பியே ஏற்று வளர்ந்து வந்தன.

இங்கே பிறப்பு எதற்கும் பொறுப்பல்ல!. தீண்டாமை என்ற தீங்கு ஏதும் இங்கு இல்லை!. ஜாதி என்னும் பிரிவினைகள் இல்லை!. ஆனால், வாழ்க்கை என்ற பொறுப்பு மட்டும் அனைவருக்கும் இருக்கின்றது.

தருமம், கருமம் போன்ற காரணங்கள் காரியங்களுக்கு ஆதாரமாக இருக்கின்றது. எல்லா வகை மனிதர்களும் அவரவர்களின் பாதையில் உயர்வடையும் வழி இருக்கின்றது. அவர்கள் பயணிக்கின்ற பாதைகள் பலவாக இருப்பினும், அந்த பாதைக்கேற்ற பண்பே அவனை மேலோனாகக் காட்டுகின்றது.

இதனால் என்ன நன்மை என்றால், மனிதனின் ஒழுக்கமே அவனது வாழ்க்கையில் அவனை உயர்ந்தவனாகவோ, தாழ்ந்தவனாகவோ வாழ்வதற்கு காரணமாக அமைகின்றது.

அதாவது ஒருவனை மேலோனாக ஆக்குவதும், தாழ்ந்தவனாக மாற்றுவதும் அவனது பண்பும், நடத்தையுமே அன்றி வேறு அல்ல என்பதாகும்.

ஆகவே, **யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!** என்ற சமநோக்குப் பார்வை மட்டுமே அனைவருக்கும் வரவேண்டும்.

இதுவே அத்வைத ஞானத்தின் ஆதாரப்பலன். அ+த்வைதம் என்பது இரண்டற்ற ஒன்றே என்பதாகும்.

மேலும் இந்த உயர்ந்த அறிவைக் கற்றால் மட்டும் போதாது, "**கற்றபின் நிற்க அதற்குத் தக**" என்ற வள்ளுவனின் குறளின்படி, அவ்வறிவிலேயே நிரந்தரமாக நிற்கவும் வேண்டும். இதற்குப் பெயர்தான் '**ஞானநிஷ்டை**' எனப்படும்.

**நிஷ்டை** என்றால் வழுவாமல் நிற்றல் என்பது பொருள். கற்ற படி நிற்க வில்லையென்றால் தருமம் தவறியவராக ஆகின்றோம். அப்படி ஒரு தவறு ஏற்பட்டால் அதனை திருத்திக்கொள்ள முயல வேண்டும். அதற்கு பணிவும், விடாமுயற்சியும் தேவை.

இனி **மனிஷா பஞ்சகம்** என்ன போதிக்கின்றது என்பதைப் பார்க்கலாம்.

உபநிஷத்துக்களில் முதன்மையாக விளக்கப் படும் மஹாவாக்கியமான அந்த அத்வைத அறிவை, இந்த பஞ்சகம் என்ற ஐந்து சுலோகங்கள் மூலமாகப் பல்வேறு வழிகளில் சாரமாக விளக்கியுள்ளார்.

முதல் இரண்டு சுலோகங்களில், ஜீவ பிரம்ம ஐக்கியம் பற்றி விளக்கியுள்ளார்.

மூன்றாவது சுலோகத்தில் அத்வைத அறிவை அடைவதற்குப் பின்பற்ற வேண்டிய வழிகளையும், அதனால் கிடைக்கும் பலன்களையும் விளக்கியுள்ளார்.

நான்காவது சுலோகத்தில் ஆத்மா அறிவு சொரூபமானது என்றும், அதை ஏன் புற அறிவினால் அறிய முடியாது என்றும் விளக்கியுள்ளார்.

ஐந்தாவது சுலோகத்தில் அத்வைத அறிவின் பலன் ஆத்மாவை ஆனந்தம் என அறிவதே என்று விளக்கியுள்ளார்.

ஒவ்வொரு சுலோகத்திலும் தன்னுடைய <u>நிச்சயித்த அறிவை</u> நிலைநாட்டியுள்ளார்.

"விழிப்பிலும், கனவிலும், ஆழ்ந்த உறக்கத்திலும் எந்த தூய உணர்வு தெளிவாக வெளிப்படுகிறதோ, பிரபஞ்சத்தின்

சாட்சியாக எது பிரம்மா முதல் எறும்பு வரை அனைத்து உடல்களிலும் ஊடுருவியுள்ளதோ அதுதான் நான்.

நான் காணப்படும் பொருள் அல்ல" என்று எவருக்கு உறுதியான ஞானம் இருக்கிறதோ, அவர் சமுதாயத்தால் தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் சரி, அல்லது சமுதாயத்தில் உயர்வாக கருதப்படுபவராக இருந்தாலும் சரி, அவரே என் குரு என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. என்று பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் தெரிவித்துள்ளார்.

"அனைத்து உயிர்களுக்குள் இருக்கும் ஜீவாத்மாவும், உலகத்திற்கே சாட்சியாக இருக்கும் பரமாத்மாவும் ஒன்று என்ற அத்வைத அறிவை எவர் ஒருவர் அடைந்து, அந்த அறிவிலேயே நிலைத்து நிற்கிறாரோ, அவர் புலையனாக இருந்தாலும் சரி, வேதம் ஓதும் அந்தணராக இருந்தாலும் சரி, அவரே எனது "ஆசான்" என்பதே ஜகத்குரு ஆதிசங்கரரின் நிச்சயமான அத்வைத அறிவு எனலாம்.

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் உண்மை அறிவை உணரவேண்டி, சாதி வேற்றுமை இல்லாமல் சமுதாய வளர்ச்சிக்காக சம நோக்கு என்ற பண்பை நாம் அனைவரும் வளர்த்து கொள்ள ஆதி சங்கரரின் மனீஷா பஞ்சகம் உதவும் என்பது திண்ணம்.

ஆஹாரநித்ராபயம்மைதுனானிஞ்சாமான்யமேதத்பசுபிர்நரணாம் |
ஞானம்நராணாம்அதிகோவிசேஷோஞாநேநஹீந: பசுபிஸ்ஸ்மான: ||

எல்லா உயிர்களுக்கும், உணவு, உறக்கம், பயம், காமம் முதலிய தருமங்கள் பொதுவாக இருப்பினும், மனிதன் மட்டுமே தன்னை அறியும் ஞானத்திற்குத் தகுதியானவன்.

அத்தகைய உயர்ந்த அறிவை அறியாமல் இருக்கின்ற, மனிதனும் விலங்கினைப் போலவே ஆகின்றான் என்பது மேற்கண்ட சுலோகத்தின் பொருள்.

அவ்வாறு தன்னை அறிதலே உண்மையான “ஞானம்” என்றும், மற்ற உலக விஷயங்களை அறிதல் “விஞ்ஞானம்” என்றும் “அமரகோஷம்” என்ற வடமொழி காவியம் கூறுகின்றது.

நன்றி!

**என்றும் அன்புடன்,**

**ப்ரக்ஞன்**

# முதல் ஸ்லோகம்

**ஜாக்ரத்ஸ்வப்ன ஸுஷுப்திஷுஸ்புடதரா யாஸம்விதுஜ்ரும்பதேயா**
**ப்ரஹ்மாதிபிபிலீகாந்ததனுஷு ப்ரோதாஜகத்ஸாக்ஷிணீ| ஸைவாஅஹம் ந ச**
**த்ருச்யவஸ்திவதித்ருடப்ரக்ஞாபி யஸ்யாதி சேதே**
**சண்டாளோऽ ஸ்து ஸ துத்விஜோஸ்துகுருரித்யேஷா:மனீஷா மம ||**

## <u>பொருள்</u>

விழிப்பு (ஜாக்ரதா), கனவு (ஸ்வப்பனம்), மற்றும் உறக்கம் (ஸுஷுப்தி) ஆகிய மூன்று நிலைகளிலும் அந்த ஒரே ஆன்மாதான் (சிவ பரமாத்மன்) படைப்புக் கடவுள் ஆன பிரம்மா முதல் (பத்மம் எனப்படும் தாமரையில் வீற்றிருப்பதால் பிரும்மாவுக்கு பதுமன், பத்மன் என்ற பெயர்கள் பல உண்டு.) சின்னஞ் சிறிய எறும்பு வரையான பல்வேறு உயிரினங்களாகத் தோற்றம் காண்கின்றன.

அந்த ஏக ஆன்மாதான் பிரபஞ்சத்தின் இயக்கமாக விளங்குகிறது. அதனை (நம்மால்) நேரடியாகக் காண முடியாது. ஆனால், உலகின் செயல்பாடுகள் அனைத்தையும் கண்காணித்துக் கொண்டிருக்கின்ற சாட்சியாக அந்த ஏக ஆன்மா திகழ்கிறது. அப்படிப்பட்ட பேருண்மையான சிவமே

(ஏக ஆன்மாவே) நான் என்பதில் (அதாவது அந்தப் பரமாத்வே தன்னுள் உறைவதாக எவன் ஒருவன் நம்பிக்கை கொள்கிறானோ, அப்படிப்பட்டவன் பஞ்சமா பாதகனாக இருந்தாலும்) சரி, அல்லது கற்பிதமான இந்தச் சாதி முறையில் பிராமணனாக இருந்தாலும் சரி, அவரை எனது குருவாக நான் ஏற்றுக்கொள்கிறேன் என்கின்றார் ஆதிசங்கரர்.

## <u>விளக்கம்:</u>

இந்த மூதல் ஸ்லோகம் ஜீவனைப் பற்றிய ஆய்வினை மூதல் வரியிலேயே காட்டுகின்றது. ஜீவனை ஆய்வதற்கு, மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்களையே பொருளாக எடுத்துக்காட்டுகின்றது.

எல்லா மனித உயிர்களும் தினம் தினம் மாறி மாறி அனுபவிக்கும் மூன்று நிலைகளை உபநிஷதங்கள் ‘அவஸ்தா' என்று குறிக்கின்றது.

ஒன்று 'ஜாக்ரத்' எனும் உடலும், மனமும் பூத உலகியலில் ஈடுபடுகின்ற விழிப்பு நிலை.

இதைத்தான் நாம் தினசரி நடத்தும் உலக வாழ்க்கையாகக் கருதுகின்றோம்.

ஆனால், உபநிஷதங்கள் இந்த விழிப்பு நிலையை மூன்றில் ஒருபங்கான அவஸ்தை என்றே குறிப்பிடுகின்றது.

மற்றொரு அனுபவம் கனவு என்ற ‘ஸ்வப்ன அவஸ்தை’ ஆகும்.

இந்தக் கனவு நிலையில் ஸ்தூல உடலோ, பூத உலகியலோ தொடர்பில் இல்லை. மனம் மட்டுமே சித்தத்தில் பதிந்த பதிவுகளை கனவுகளாக படைத்து அனுபவிக்கின்றது.

மூன்றாவது அனுபவம் ஆழ்ந்த உறக்கம் அல்லது ‘சுஷுப்தி’ என்பது ஆகும்.

இந்த ஆழ்ந்த உறக்கத்தில் நமது உடலும், மனமும் எதையும் அறியாமல் ஒன்றும் தெரியாத ஒரு அனுபவத்தைக் கொடுக்கின்றது.

நாம் நமது தினசரி வாழ்க்கையில் இந்த மூன்று அனுபவங்களையுமே தொடர்ந்து பெறுகின்றோம். உபநிஷதங்கள் இந்த மூன்று அனுபவங்களையும் ஆராய்கின்றது.

இவ்வாறு அனுபவங்களை ஆய்வதினாலேயே அந்த அனுபவங்களினுடைய ஆதார அறிவினை பெற

முடியும். அனுபவத்தால் அடையும் அறிவு ஒன்று, அனுபவத்தை ஆராய்வதால் வரும் அறிவு அதைவிட ஆழமானதாக இருக்கும்.

உண்மை என்று நாம் அனுபவத்தில் கொண்டு இருக்கின்ற அறிவு, சரியான விசாரத்தின் வாயிலாக உண்டான ஆய்வுகளுக்குப் பிறகு வேறொரு உண்மையினைக் காட்டுகின்றது.

உதாரணமாக, சூரியன் உதிப்பதைப் பார்த்து, அது கிழக்கில் உதிக்கின்றது என்ற அறிவு உண்மை. அதுவே அதனை ஆராய்ந்துப் பார்த்ததில் சூரியன் உதிப்பதோ, மறைவதோ இல்லை, அதன் கிழக்கின் உதயம் பூமியின் சுழற்சியால் நிகழ்கின்றது என்பது விசாரித்து, ஆராய்ந்த தெளிந்த அறிவாகின்றது.

அனுபவம் எல்லோருக்கும் இன்னும் முன் போலவே இருப்பினும், ஆராய்ந்த ஆதார அறிவானது வேறாக இருக்கின்றது.

இதிலிருந்து ஒரு நிலையில் நாம் அனுபவிக்கும் உலகமோ, உடலோ, பொருளோ மறுநிலையில் அப்படியே இருப்பது இல்லை என்பது நன்கு புரிகின்றது.

மேலும் கனவு நிலையில் உங்கள் நண்பர் உங்களுக்கு ஒரு சுவையான விருந்து வைக்கின்றார் என்றால், அதை தாங்கள் விழிப்பு நிலைக்கு வந்ததும் தங்களது பசி ஆறியது போலஇருக்குமா?

அதுப்போல தாங்கள் விழிப்பு நிலையில் பணக்காரனாக இருந்து கனவு நிலையில் பிச்சைக்காரனாக கனவு கண்டால் அது நிலைக்குமா?

அவ்வாறே, விழிப்பு அற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் எந்த அனுபவமும் இன்றி இருக்கும் நிலை ஒரு ஆனந்த அனுபவம்.

இப்படிப் பார்க்கும் பொழுது இந்த ஒவ்வொரு அனுபவங்களிலும் உலகோ, உடலோ, மனமோ இவைகளெல்லாம் மாறிக் கொண்டே இருக்கின்றன. நிலையானவைகளாக இல்லை.

அப்படியானால், இந்த மூன்று அனுபவங் களிலும் எது மாறாமல் இருக்கின்றது?

“நான்” இந்த உலக விஷயங்களில் ஈடுபட்டேன், “நான்” கனவில் இதனைக் கண்டேன். அல்லது “நான்” நன்றாக தூங்கினேன். என்பதை எது அறிகின்றது?
அறிவுதான் அனுபவத்திற்கு அடிப்படை.

ஆக அனுபவிப்பவன் அறிவு மயமாகவே இருக்கின்றான். ஆக அந்த அறிவே 'நான்' என்றும் புரிகின்றது.

இந்த ஆய்வில் நாம் தெரிந்துக் கொண்ட முக்கிய உண்மைகள் என்ன?

முதலில் "நான்" என்பவன் உடல்/மனம்/உலகம் இவற்றிலிருந்து வேறுபட்டவன். இரண்டாவது, 'நான்' என்பது அறிவு மயமானதாக இருக்கின்றது.

மூன்றாவதாக அந்த 'நான்' ஜீவனுடைய மூன்று அனுபவ நிலைகளிலும் மாறாது தொடர்ந்து இந்துக் கொண்டே இருக்கின்றது.

இறுதியாக மனித வாழ்க்கை என்பது இந்த மூன்று விதமான அனுபவங்களின் மொத்தமே என்பதால் இந்த 'நான்' என்பவன் என்றுமே ஜீவனிடமிருந்து மாறாதவனாக இருக்கின்றான்.

அந்த "நான்" என்பவன் இந்த ஜீவனை ஆராய்ந்ததால் கிடைத்த "அறிவு" ஆகும்.

அந்த அறிவே ஆன்மாவாகும். என்ற உண்மையை இந்த முதல் ஸ்லோகத்தில் எவ்வளவு அழகாக எடுத்துரைத்துள்ளார்.

# இரண்டாம் ஸ்லோகம்

**பிரஹ்மோவாஹமிதம் ஜக்ச்ச ஸகலம்சின்மாத்ரவிஸ்தாரிதம்ஸர்வம்**
**சைததவித்யாதிரிகுண்யாS சேஷம் மயகல்பிதம்|**
**இத்தம் யஸ்ய த்ருடா மதி: ஸுகதரேநித்யேபரே நிர்மலேசண்டாளோS ஸ்து ஸ**
**து த்விஜோஸ்துகுருரித்யேஷா மனிஷா மம||**

## <u>பொருள்</u>

உலகில் தோன்றிய அனைத்துமே அந்த பரப்பிரம்மத்தின் பரிமாணங்களே.

அதாவது உலகில் காணப்படும் அனைத்து வஸ்துகளும் உயிரினங்களும் அந்தப் பரம்பொருளின் வெளிப்பாடுகளே.

**பரமாத்மாவும், ஜீவாத்மாக்களும் ஒன்றேதான் வேறு வேறு அல்ல.** இதைத்தான் சின் முத்திரையாக (கட்டை விரலும் ஆட்காட்டி விரலும் இணைந்த வட்டமாக) இறைவன் உணர்த்துகிறார்.

ஆனால், சத்வம், ரஜோ, தமோ ஆகிய முக்குணங்களால் தோன்றிய பிருகிருதியின் கூட்டால், அந்த பரமபுருஷ தத்துவத்தை உணர்ந்துக் கொள்ள முடியாத வேற்றுமைகள் தென்படுகின்றன.

அதாவது வெளிப்பார்வைக்கு நம்மால் பாகு படுத்திப் பார்க்கப்படும் பல்வேறு உயிர் இனங்கள் மற்றும் பொருள்களின் அடிப்படையாகத் திகழும் ஜீவரசம், ஆற்றல் ஒன்றுதான்.

ஆகவே பரபிரும்மம், சிவபரமாத்மா, எப்போதும் நிலைத்து நிற்கக்கூடிய நித்தியமாய், எவ்வித களங்கமோ குறைகளோ இல்லாத நிர்மலமாய் திகழ் கின்ற அந்தப் பேருண்மைநான் என்பதை உணர்ந்து, அதில் திளைப்பவர் பஞ்சமரோ, பிராமணரோ அவரே எந்தன் குரு என்பதை ஒப்புக் கொள்கிறேன் என்கின்றார் ஸ்ரீஆதிசங்கரர்.

## **விளக்கம்:**

முதல் ஸ்லோகத்தில் ஜீவனைப்பற்றி, அதாவது நம்மைப்பற்றிய ஆராய்ச்சிக்கு மூன்று அவஸ்தை களான விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம் என்ற நம்முடைய அனுபவங்களையே கருவாக எடுத்துக் கொண்டதுபோல, உலகத்தைப் படைத்தவன் இறைவன் என்பதால் இந்த உலகத்தையே கருவாக எடுத்து ஆராய முற்படுவோம் என்கின்றார் ஸ்ரீசங்கரர்.

அதற்கான பாதையாக அவர் எடுத்துக் கொண்டது காரண, காரிய விவாதம் ஆகும். காரணம் என்பது ஆதார அறிவு, காரியம் என்பது விளைந்த செயல்.

முதல் ஸ்லோகத்தில் கூறியபடி, ஜீவன் மூன்று அவஸ்தைகளில் இருப்பதைப் போலவே, இந்த உலகங்களும் மூன்று அவஸ்தைகளில் இருக்கின்றன.

அவைகள் **ஸ்தூலபிரபஞ்சம்** (கண்ணால் காணும் இந்த உலகம்), **சூட்சுமபிரபஞ்சம்** (கண்ணிற்கு தெரியாத அணுமயமான பிரபஞ்சம்), அடுத்து **காரண பிரபஞ்சம்** (ஸ்தூல, சூட்சும பிரபஞ்சம் உருவாக ஆதாரமான பிரபஞ்சம்) என்கின்றது உபநிஷதங்கள்.

மாண்டூக்ய உபநிஷதம் முதல் ஸ்லோகத்தில் கண்ட ஜீவனின் மூன்று அனுபவ உலகங்களையும் "**விஸ்வா**" (விழிப்புலகம்), "**தைஜஸா**" (கனவுலகம்), மற்றும் "**பிரக்ஞா**" (காரண அறிவுலகம்) என்று அழைக்கின்றது.

அதேப்போல, இரண்டாவது ஸ்லோகத்தில் கண்ட உலகங்களின் மூன்று அனுபவங்களை **"வீராட்"** (ஸ்தூல உலகம்), "**ஹிரண்யகர்பன்**" (நுண்ணிய உலகம்), மற்றும் **"மாயா"** அல்லது "**ஈஸ்வரமாயா**" (மாயா உலகம்) என்று அழைக்கின்றது.

அதாவது, ஜீவனுக்கு எப்படி மூன்று விதமான அவஸ்தைகள் (விழிப்பு, கனவு, ஆழ்ந்த உறக்கம்) அனுபவமாக உண்டாகின்றதோ, அதுப்போல, ஈஸ்வர னுக்கும் மூன்று விதமான அனுபவங்கள் இந்தப் பிரபஞ்சத்தின் மூலமாக உண்டாகின்றது.

அவைகளே **வீராட்**, **ஹிரண்யகர்பன்,** மற்றும் **மாயை** ஆகும்.

இதில் காரண அவஸ்தையில் உலகம், ஜீவனது ஆழ்துயில் அவஸ்தை போன்றே அறிவு பூர்வமான ஈஸ்வரனிடத்திலேயே அடங்கி இருப்பதினால், இதை **மாயா** என்கின்றோம்.

புராணங்களும் இந்த மாயையை ‘**சக்தி**’ என்று அழைக்கின்றது. சக்தி எப்பொழுதும் மற்றதைச்சார்ந்தது அல்லவா? அதுப்போல, மாயாசக்தி ஈஸ்வரனையே சார்ந்து உள்ளது.

இந்த மாயை நம் அறிவிற்கு அப்பாற் பட்டதாகினும், மாயை மூன்று குணங்களை கொண்டது என்பதும், அவைகள் **சத்துவம், ரஜஸ், தமஸ்** என்கின்ற “**திரிகுணா**” என்று அழைக்கப்பட்ட குணங்களால் ஆனதே இந்த பிரபஞ்சம்ஆகும்.

மாயா உலகிலிருந்தே ஹிரண்யகர்பன் என்கின்ற சூக்ஷ்ம உலகம் தோன்றுகின்றது.

இது முதலில் ஆகாயத்தையும் (பரவெளி), பிறகு வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்து சூட்சும பூதங்கள் முதலில் உருவாகின. இந்த சூட்சும பூதங்கள் ஐந்தும் தம்முடைய காரண அறிவாகிய சத்துவ குணத்தினால் உருவாக்கப்பட்டதே நம்முடைய மனமும், ஞானேந்திரியங்களும் ஆகும்.

அதனாலேயே மனமும், ஞானேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு மற்றும் செவி ஆகிய ஐம்புலன்களும் அறிவுக் கருவிகளாக இருக்கின்றன.

இந்த சூட்சும ஐம்பூதங்களிலிருந்து செயலைத் தூண்டுகின்ற ரஜோ குணத்தினால், பிராணனும், கர்மேந்திரியங்களான வாய், கை, கால், மலவாய் மற்றும் கருவாய் ஆகியவைகள் தோன்றின.

இதில் பிராணன் என்ற மூச்சு எப்பொழுதுமே செயலாற்றிக் கொண்டிருப்பது இதனால்தான்.

அதுப்போலவே, சூட்சும ஐம்பூதங்களின் ஜடமான தன்மையாகிய தமோ குணத்தினால் உலகில் ஸ்தூலமான பஞ்சபூதங்கள் தோன்றின.

இவைகளே நாம் பார்த்தும், உணர்ந்தும் அனுபவிக்கின்ற நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகும்.

பிறகு, இந்த ஸ்தூல பஞ்ச பூதங்களின் சேர்க்கையினாலேயே, படிப்படியாக உலகில் நாம் காணும் அனைத்து ஸ்தூல உடல்களான ஜடப் பொருட்கள் தோன்றின.

ஸ்ரீஆதிசங்கரர் தனது “பஞ்சீகரணம்” என்ற நூலில், இந்த பிரபஞ்ச உண்மைகளைப் பற்றிய அறிவினை விளக்கியுள்ளார்.

மாண்டுக்ய உபநிஷதம் ஜீவனின் மூன்று அனுபவ உலகங்களையும், ஈஸ்வரனின் மூன்று

அனுபவ உலகங்களையும், ஆதார அறிவின் மூலம் ஒன்றே என்று காட்டி, அதன் மூலம் ஜீவ-ஈஸ்வர ஐக்கியத்தை நிலை நாட்டுகின்றது.

இவ்வாறு முதல் இரண்டு ஸ்லோகங்களிலும் ஜீவ - ஈஸ்வர ஐக்கியத்தை விளக்கி, அதனால் சம நோக்கினை உணர்த்தி, இவ்வரிய ஞானத்தை உணர்ந்த புலையனும் வணங்கத்தக்க குருவே எனத் தமது நிச்சயித்த அறிவையும் வெளிப்படுத்துகின்றார் பகவான் ஸ்ரீஆதிசங்கரர்.

இனிவரும் ஸ்லோகத்தில் அத்தைகைய ஞானம் அடைய நாம் செய்ய வேண்டிய கடமைகளையும், அதனால் அடையும் பலனையும் விளக்குகின்றார்.

# மூன்றாம் ஸ்லோகம்

**சக்வான்நக்ஷ்வரமேவவிச்வமாகிலம் நிக்ஷிசித்யவாசாகுரோர:**
**நித்யம் ப்ரஹ்மா நிரந்தரம்விம்ருசதாநிர்வ்யாஜசாந்தாத்மனா| பூதம் பாதி ச**
**துஷ்க்ருதம்ப்ரதஹதா ஸம்வின்மயே பாவகேப்ராரப்தாய**
**ஸமர்பிதம்ஸ்வவபுரித்யேஷா மனீஷா மம||**

## பொருள்

விரிந்து பரந்துள்ள இந்தப் பிரபஞ்சம் முழுவதுமே நிலையில்லாத மாயை ஆகும். இங்கு ஒரு விஷயத்தை விளக்க வேண்டியிருக்கிறது.

மாயை என்பது பொய்யன்று. உண்மையும் அன்று. இருப்பதுப் போலத்தோன்றும் ஆனால், அது இல்லை எனலாம்.

குறிப்பிட்ட காலத்துக்கு உண்மை போலத் தோற்றம் அளிப்பதே மாயை. உண்மை என்பது **‘உள்’** என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானது. அதாவது உள்ளதென்று பொருள்.

ஆக, உண்மை என்பது எக்காலத்திலும் உள்ளதாக இருத்தல் வேண்டும். எல்லாம் வல்ல இறையாற்றல் ஒன்றுதான் எப்போதும் இருக்கக் கூடிய உண்மை. (சாஸ்வதமான சத்தியம்).

ஆனால், இந்தப் பிரபஞ்சமானது குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இருக்கக்கூடியது. ஆகையால், ஒருவகையில் மட்டுமே உண்மை.

ஆனால், அந்தக் காலக்கெடு முடிந்ததும், இந்த பிரபஞ்சம் அழிந்து, இல்லாமல் போய் விடுகின்றது. ஆகையால், பொய்யாகவும் முடிகின்றது.

அதேப்போல்தான் இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வஸ்துகளும், குறிப்பிட்ட காலம் வரை இருந்து பிறகு இல்லாமல் மறைகின்றன. இதற்குப் பெயர்தான் மாயை.

இதனை 'கயற்றரவு' என்ற வார்த்தையால் மகாகவி சுப்ரமணியபாரதி விளக்குவார்.

அதாவது காற்றில் அசையும் கயறு, தூரத்தில் நின்று பார்க்கையில் பாம்புபோல அசையும். அந்தக் காற்று நின்றுவிட்டால் அது வெறும் கயறு என்பது தெரியும்.

அதுப்போல, பிராணன் என்று காற்று இருக்கும் வரை இந்த உயிரினங்கள் அசைகின்றன. பின்னர் அவைகள் மடிந்து விடுகின்றன. ஆகையால் இவைகள் எல்லாம் **மாயை** எனப்படுகின்றது.

நிரந்தனமான நிச்சயம் அந்த ஏக ஆத்மாவான சிவம் மட்டுமே. அந்த உண்மையை ஐயமின்றி உணர்ந்துக் கொள்வதற்காகத்தான் மிக உயர்ந்த இந்த பிறப்பான மானுடப்பிறப்பு வாய்த்திருக்கிறது.

ஆகையால், இப்பிறவியில் அந்த ஏக ஆன்ம ரூபத்தை அறிந்து, தியானித்து ஞான நிலைப் பெற்று, இனிமேலும் பிறவி எடுக்காமல் இருக்கும் தவத்தை மேற்கொள்ள வேண்டும். அது ஒன்றே இந்த கிடைத்தற்கரிய மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும்.

தவம் என்பதற்கு ஒரு நிலையில் உறுதியாக நிற்றல், அல்லது ஒன்றை தொடர்ந்து மேற்கொள்ளுதல் என்று பொருள்.

ஆக, அழிவில்லாத, ஆதியும் அந்தமும் இல்லாத, என்றுமே மாறாத, எல்லாவற்றிலும் வியாபித்து நிற்கும் அந்த பரமாத்மாவே அனைத்து உயிரினங்களிலும் உறைகின்றார், அவரே என்னுள்ளும் உரைவதினாலே, நானும், அவரும் ஒன்றே என்ற இடைவிடாத எண்ணமே '**தவம்**' ஆகும்.

குருவாக வந்து அந்த இறைவனே உபதேசித்த இந்த அரிய தத்துவத்தை அப்படியே ஒப்புக் கொள்கிறேன் என்கிறார் ஸ்ரீஆதிசங்கரர்.

## <u>விளக்கம்:</u>

முதல் இரண்டு ஸ்லோகங்களில் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே என்ற ஞானசாரத்தைக் கொடுத்த ஆதிசங்கரர், இந்த மூன்றாவது ஸ்லோகத்தின் வாயிலாக அத்தகைய உயரிய ஆத்மஞானத்தை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும், அதனால் வரும் ஞானத்தில் நாம் நிலையாக நிற்க வேண்டும் என்பதையும், அதனால் நாம் அடையும் பயனையும் வலியுறுத்துகின்றார்.

நான் என்னும் அறிவே நித்யம், மற்றதெல்லாம் அழியக் கூடியது. அந்த நான் எனும் ஆத்மாவே பிரம்மம் எனும் பேருண்மையை உணர்தலே மனித வாழ்வின் மகத்தான குறிக்கோள்.

அந்த ஞானத்தை இந்தப் பிறவியிலே அடைவதற்கு, நமக்கு எத்தகைய தகுதிகள் வேண்டும் என்பதுதான் முதல்பாடம்.

‘நிர்வ்யாஜ’ எனும் மனத்தூய்மையே முதல் தகுதி, தூயமனம் அடைவதற்கும், அந்த நிலையி லேயே இருப்பதற்கும் நாம் மிகவும் உழைக்க வேண்டும்.

அதற்கு ஒரு எளியவழி என்னவென்றால், மனத்தின் குணத்திலேயே மாற்றத்தை ஏற்படுத்துவது மட்டுமே ஆகும்.

மனம் ஆசையின் வித்து என்பதால், அதில் தீயவைகளை ஏற்றிக் கொள்வதைக் காட்டிலும், எப்பொழுதுமே தூய்மையான பலனையே நமது ஆசையாக ஆக்கினால், மனம் தூய்மையையே நாடும், அதனாலேயே மனம் தூய்மை அடைந்துவிடும்.

அப்படி என்றால், முதலில் தூய்மையான பலனைத் தருவது எது? என்ற அறிவும், அதனையே அடைய வேண்டும் என்ற ஆசையையும் வளர்த்துக் கொள்ளப் பழக வேண்டும்.

தூய அறிவு இருந்தால், “ஸாந்தாத்மம்” எனும் அமைதியால் குவிந்த மனத்தினை நாம் அடைய முடியும்.

அமைதி என்பது ஆசையின் விளைவால் எழும் உணர்ச்சிகளால் அலை பாயாத மனம்.

தூய ஆசைகளினால், அமைதி பெருக ஆரம்பிக்கும். அத்தகைய மனம் வளரவும், குறிக்கோளை நோக்கிக் குவியவும், வேதாந்த சிரவணம் (குரு முகமாக வேதாந்த சத்சங்கங்கள் கேட்டல்) போன்றவைகள் மிக, மிக அவசியமாகின்றன.

இதனால் தூய அறிவும், மன அமைதியும், சரியான குறிக்கோளும் அமைந்து விட்டால் குருவின் உபதேஷத்தை உறுதியாக நாடுகின்ற உற்சாகமான மனநிலை தோன்றும்.

கற்றல் என்பது குருவின் நேரடிக்கருணை, நல்ல நூல்கள் பல நமக்கு உதவிகள் புரிந்தாலும் நேரடியாக குருவை சரணடைந்து உபதேஷம் பெறுவதே ஞானயோகத்திற்கான நல்லவழி.

மேற்கூறிய மூன்று தகுதிகளையும் அடைந்தால், நமக்கு முதல் இரண்டு ஸ்லோகங்களில் உபநிஷதங் களின் சாரமாகக் காட்டப்பட்ட, **'ஜீவ பிரஹ்ம ஐக்கிய ரகசியம்'** எனும் ஈடில்லா அத்வைத ஞானம் கிடைக்கும்.

அந்த ஞானத்தை **'நிஷ்சித்ய'** எனும் படியாக, உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். உறுதியற்ற நிலைக்கு காரணம் ஐயம் என்ற நோய் ஆகும்.

உறுதியான நிச்சயித்த அறிவு, நம்முள் நிலைப்பெற வேண்டும். அதற்குத் தக்கபாதை, **“நித்யம் ப்ரஹ்மா நிரந்தரம் விம்ரிஷிதா”** எனக் கூறியபடி, எப்போதும் நானே பிரஹ்மம், நான் பூரணமானவன் என்னும் உறுதியான திட நிச்சயத்தில் எப்பொழுதும் தன் சொரூபத்தில் இருக்கவேண்டும்.

இவ்வாறு ஆத்மஞானத்திலேயே நிலைத்து நிற்கமுடியும் என்றால், அதன் பலனாக, உடல்களுக்கு வித்தாகின்ற வினைகள் எல்லாம் அழிந்து, பிரஹ்மமயமான உணர்விலேயே அந்த ஞானியால் லயிக்க முடிகிறது.

அந்நிலையிலேயே, **‘அகிலங்கள் எல்லம் அழியக் கூடியன, ஆதார அறிவாகிய நான் என்னும் ஆத்மாவே இரண்டற்ற எப்போதும் இருக்கும் உண்மை’** என்ற பேருண்மையால் அந்த ஞானியால் திளைக்க முடிகின்றது.

அப்படிப்பட்ட உயர்ந்த நிலையிலே, தற்பொழுது ஏற்றுள்ள இந்த பூதவுடலும் தன்னுடையதல்ல என்ற வைராக்கியம் ஏற்பட்டு, அவ்வுடல் அடையும் எல்லா வித சுகதுக்கங்களையும், வினையின் பயனாக ஏற்றுக் கொள்ளும் உறுதி பிறக்கின்றது.

**பிறகு அவர் ஒரு பிரஹ்ம ஞானியாக, உடல் எனும் கூட்டை வெறுமனே சுமந்து திரிகின்றவராக, நான் எனும் ஆணவம் அற்ற உயிருடன் இருக்கின்ற பொழுதே ஜீவன் முக்தராக வாழ்கின்றார்.**

இந்த நிலையையே **"ஜீவன்முக்தி"** எனப் படுகின்றது.

இந்த ஜீவன் முக்த நிலையில் ஞானி உடலை விட்ட பிறகு வினைகள் ஏதும் அவனுக்கு இல்லாத தாலும், அந்த ஞானியின் உள்ளத்தில் தான் பிரஹ்ம மாகவே இருப்பதாலும், உடலற்ற நிலையில் இரண்டற்ற அந்த பிரஹ்மத்திலேயே இரண்டறக் கலந்து விடுகின்றான்.

இந்த நிலையையே **"விதேகமுக்தி"** எனப்படும்.

இத்தகைய நிலையை அடைபவர்கள் கோடியில் ஒருவராக இருப்பார்கள். அந்த ஒருவராக நாம் ஏன் இருக்கக்கூடாது? ஆழ்ந்து யோசியுங்கள்!

அரிதான இந்த மனித தேகத்தை, மகத்தான அந்த உயர் வாழ்விற்கு உயர்த்துவதற்காகப் பயன் படுத்துங்கள்.

# நான்காம் ஸ்லோகம்

**யா திர்யங்நரதேவதாபிரஹமித்யந்த: ஸ்புடாக்ருஹ்யதே
யத்பாஸாஹ்ருதயாக்ஷதேகவிஷயாபாந்தி ஸ்வதோs சேதனா:|
தாம் பாஸ்யை:பிஹிதார்கமண்டலநிபாம்ஸ்பூர்தி ஸதா பாவயந்யோகீ
நிவ்ருதமானஸோ ஹிகுருரித்யேஷா மனீஷா மம||**

## <u>பொருள்</u>

ஆண்டவன் அனைத்திலும் வியாபித்துள்ளார். அவர் இல்லாத வஸ்து என்று எதுவுமில்லை. அவரே அனைத்தின் இயங்கு சக்தியாகவும் விளங்குகிறார்.

நம் மூலமாக அனைத்து செயல்களையும் செய்பவர் அவரே. ஆனால், சூரியனின் பிரகாசத்தை மேகம் மறைப்பதுப் போல, அந்த ஆண்டவன் குறித்த உண்மையை அறிய இயலாமல் நமது அறியாமை மறைத்துள்ளது.

அந்த அவித்தை நீங்கி, ஆண்டவனின் இருப்பையும் தன்மையையும் தனக்குள்ளேயே உணர்ந்து அறிந்துக் கொள்பவர் மாபெரும் யோகி ஆவார்.

இதனை ஐயமின்றி, உறுதியுடன் நான் ஒப்புக் கொள்கின்றேன் என்கிறார் ஆதிசங்கரர்.

## விளக்கம்:

இங்கு 'நான்' என்னும் உணர்வு மனிதர்களுக்கு மட்டுமின்றி மற்ற அனைத்து ஜீவராசிகளுக்கும் பொதுவானது.

அவைகள் தன்னுடைய உடல், புலனறிவுகள், மனம் போன்றவைகளை கொண்டு அறிவுடன் விளங்கு வதாகத் தெரிகின்றது.

அதனாலேயேதான் எண்ணங்களுக்கு ஏற்றவாறு, மனதையும், உடலையும் கொண்டு, அவைகள் செயலாற்றுகின்றன.

ஆனால், இந்த 'நான்' என்ற தன் இருப்பு அறிவிற்கு காரணம் ஆன்மாவின் அறிவே ஆகும்.

அந்த அறிவினாலேயே மனம், உடல், புலன்க ளாகிய கருவிகள் எல்லாம், உயிர்த்தும், அறிவுடன் இருப்பது போலவும் தெரிகின்றது.

ஆன்மா இல்லையெனில் இவைகள் அனைத்துமே சட(ல)ம்.

இந்த ஆன்மாவின் ஒளியே மனம், உடல் என எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்கின்றது.

அப்படியானால், இந்த ஆன்ம ஒளியை நம்மால் ஏன் காணமுடியவில்லை என்ற ஐயம் வருகின்றது.

இதற்கு காரணம் மனம். மனமே ஆத்மாவை மறைக்கின்றது. அதாவது, மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட பல்வேறு எண்ணங்களின் ஆதிக்கத்தினால், ஆத்மாவை அறிய முடியாமல் மறைக்கப்பட்டுள்ளது.

மனமே ஆத்மாவினால் பிரக்காசிக்கும் பொழுது, மனம் எப்படி ஆத்மாவை மறைக்க முடியும்? என்றால்,

ஒளி பொருந்திய சூரியனை சாதாரணமான மேகக் கூட்டங்கள் தற்காலிகமாக மறைப்பதைப் போன்றே, இந்த மனதிலே ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்கள் மனதின் அழுக்கான அறியாமை மேகங்கள் எனலாம். இதுவே ஆன்ம ஒளியினை தற்காலிகமாக மறைத்துள்ளது.

மேகங்கள் நீங்கியதும், மீண்டும் சூரியனுடைய பிரகாஷம் எவ்வாறு வெளிப்படுகின்றதோ?

அதுப்போல, நம்முடைய அறியாமை எண்ணங்கள் நீங்கியதும், **ஆன்மா** வெளிப்படுகின்றது.

அத்தகைய அறியாமையை விலக்குவதே "**ஆத்மவிசாரம்**" அல்லது தன்னை அறியும் தவம் என்கின்றார் ஸ்ரீஆதிசங்கரர்.

அத்தகைய ஒளியை, ஆன்ம அறிவை முற்றும் ஆராய்ந்து, அந்த அறிவினிலேயே எப்போதும், நிலைத்து நிற்கின்றவர் எவரோ, அவரே யோகி. அவரே ஞானி என்று அழைக்கப்படுகின்றார்.

அவர் தன்னுடைய ஞானத்தினால் மனநிறைவு பெற்றவராக, முற்றிலும் திருப்தி அடைந்தவராக எப்போதும் இருக்கின்றார்.

முற்றிலும் திருப்தி பெற்ற நிலையே ஆனந்தம். அத்தகைய முழு திருப்தி உடைய ஞானி, உலக வழக்கில் புலையனாகவோ, பிராஹ்மணனாகவோ எவராக இருப்பினும், அவரே உயந்த சற்குரு என்பது தன்னுடைய நிச்சயித்த திடமான அறிவு என்று ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர் முடிவு செய்கின்றார்.

## ஐந்தாம் ஸ்லோகம்

**யதிஸௌக்கியாமபூதிலேஷிலேஷத்இமே சக்ராதயோ நிர்வ்ருதாயாச்சித்தே**
**நிதராம்ப்ரசாந்தகலனே லப்தவாமுனிர்நிர்வ்ருத: |**
**யஸ்மின்னித்யஸுகாம்புதௌகலிதீஹீர்ப்ரஹ்மைவ நப்ரம்ஹவித்ய:**
**கச்சித்ஸஸுரேந்த்ரவந்திதபதோ நூனம்மனீஷா மம ||**

## பொருள்

எவனொருவன், தேவர்களின் தலைவனான இந்திரனும், மற்ற தேவதைகளும் தனது தவ வலிமையால், தன்னைப் போற்றித் துதிக்கின்ற உயர்ந்த நிலையை அடைந்து விட்டபோதிலும், அதனால் மனம் பிசகாமல், ஆணவம் அடையாமல், ஆர்ப்பரிக்காமல், அமைதியாக இருந்து, தனக்குள் அன்பே வடிவாய் வீற்றிருக்கும் அந்தச் சிவம் என்ற பேரொளியில் லயித்து, அதனை எப்பொழுதும் தியானிக்கிறானோ அந்த மனிதன், பிரம்ம சொரூபமாக விளங்கும் சிவ பரமாத்மாவை முழுமையாக உணர்ந்துக் கொண்டவன் ஆகின்றான்.

அது மட்டுமின்றி, அந்த பிரும்மம் ஆகவும் அவன் ஆகிவிடுகிறான். அதாவது அந்த பிரம்மத்துடன் ஐக்கியமாகி, மீண்டும் பிறந்திறவாத அமரத் தன்மையை

அடைகிறான் என்பதை உறுதியாக ஒப்புக் கொள்கிறேன் என்கிறார் பகவான் ஸ்ரீஆதிசங்கரர்.

இது எவ்வாறெனில், பிரம்மம் என்பது அனைத்திற்கும் ஆதாரசக்தி.

அனைத்து வஸ்துக்களிலும் அந்த ஆதார சக்தியே உறைகின்றது. ஆக, ஒட்டு மொத்த பிரபஞ்சத்தின் மொத்த உயிர்சக்திதான் பிரம்மம். அது முழுமையானது.

ஆகையால், **அஹம் பிரம்மாஸ்மி, த்வம் பிரம்மாஸ்மி, சர்வம் ப்ரம்மாம:**

அதாவது, நானும், பிரம்மம், நீயும் பிரம்மம், அனைத்தும் பிரம்மம் எனப்படுகின்றது.

இந்த உண்மையை உணர்ந்து கொள்வதால், அறிவு மயக்கம் தெளிந்து, அமைதியாக இருப்பவனே அந்த பிரம்மத்தில் ஐக்கியமாகிறான்.

இவ்வாறு ஐந்து ஸ்லோகங்களைக்கூறி, அனைத்திலும் ஆண்டவன் அந்தர்யாமியாக உள்ளுரை வதால், மனிதருக்குள் மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களுக்குள்ளும் ஏற்றத் தாழ்வுகள் இல்லை.

எனவே, பிரம்மத்தை உணர்ந்தவன் அந்த போற்றுதலுக்குரிய பிரம்மமாகவே இருக்கின்றான். அவனே வணக்கத்திற்குரிய ஆசாரியன் ஆவான். அவன் மதிப்பிற்குரிய யோகியும், ஞானியுமாக இருக்கின்றான். என்பதை பகவான் ஸ்ரீஆதிசங்கரர் மிக அருமையாக இந்த ஐந்து பாடல்களின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

## விளக்கம்

முதல் இரண்டு ஸ்லோகங்களில் ஆத்மா என்றும் நிலையானது (ஸத்) என்பதையும், அடுத்த இரண்டு ஸ்லோகங்களிலும் ஆத்மா எங்கும் நிறைந்த அறிவு (சித்) எனவும் விளக்கிய ஜகத்குரு ஸ்ரீஆதிசங்கரர், இந்த ஐந்தாவது ஸ்லோகத்தின் வாயிலாக ஆத்மா முழுமையான ஆனந்த வடிவம் என்பதையும் விளக்குகின்றார்.

எல்லா உயிர்களும் அறிந்தும், அறியாமலும் இந்த நிலையான ஆனந்தத்தை நோக்கியே தங்களுடைய வாழ்க்கையை வாழத்துடிக்கின்றன.

ஆனால், இடையில் கிடைக்கும் சிறு, சிறு ஆனந்தங்களில் சிக்கிக் கொண்டு சின்னா பின்ன மாகின்றன.

இன்பமே எல்லா உயிர்களுக்கும் இயற்கை என்றாலும், அறியாமையினால் எது ஆனந்தம், அது எதனால் கிடைக்கின்றது என்று புரியாமல், இந்த உலகியலில் ஒன்று மாற்றி ஒன்றாக, பொருட்களிலும், செயல்களிலும், மற்றும் உறவுகளிலும் சுகத்தை தேடுகின்றோம்.

இவ்வாறு வெளியில் இருப்பதாகத் தேடும் இன்பத்தை “**விஷயானந்தம்**” அல்லது பொருளின்பம் என்கின்றது உபநிஷதம்.

மனித வாழ்க்கையில் நாம் இப்படிப்பட்ட பொருளின்பத்தில்தான் குறியாக இருக்கின்றோம்.

பணம், நகை, வீடு, பதவி, மற்றும் புகழ் என எல்லாவற்றிலும் இன்பத்தை அனுபவிக்கத்தான் நாம் வாழ்க்கையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், அனுபவம் வேறு மாதிரியாக இருக்கின்றது.

கிடைத்த பொருளினாலோ, பதவியினாலோ அல்லது வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அதில் நிலையான இன்பம் நிச்சயம் கிடைப்பதில்லை.

சில காலங்களிலேயே அதில் சலிப்பு தட்டி விடுகின்றது. அதை விட மேம்பட்ட ஒன்றை இந்த மனம் நாடுகின்றது.

**இதன் காரணம் என்ன?** என்பதை உபநிஷதம் ஆராய்கின்றது.

அதாவது, நாம் ஒரு பொருளை விரும்பி அதனை அடைய விரும்பும் சுகத்தை, **"பிரியம்"** என்றும், அவ்வாறு, ஆசைப்பட்ட பொருள் கிடைத்து விட்டால், அதனால் வருகின்ற சுகம் "மோஹம்" என்றும், அதன் பிறகு, அடைந்த அந்தப் பொருளை அனுபவிக்கும் சுகத்தை "பிரமோதம்" என்றும் சாஸ்திரம் அழைக்கின்றது.

இதிலிருந்து இன்பம் என்பது அந்தப் பொருளில் இல்லை எனவும், அந்தப் பொருளின் மீது வைத்துள்ள ஆசையே இன்பம் போலத் தெரிகின்றது.

அவைகள் கிடைத்தாலும் அந்த ஆசை தீர்ந்து விட்டதினால், அந்த இன்பம் அப்பொழுதே போய் விடுகின்றது. அதன்பிறகு, மீண்டும் அடுத்த ஆசை உண்டாகின்றது.

இப்படி நிலையற்ற ஆசைகளினால் நாம் அடிக்கடி அல்லல் படுகின்றோம்.

அதற்கு முக்கிய காரணம் நம்முடைய அறியாமைதான் ஆகும்.

அப்படியென்றால் எது முழுமையான இன்பம்?

ஆசையில்லா மனதில் மட்டுமே ஆன்மா பிரதி பலிக்கின்றதை அறிய முடியும். அதாவது, ஆத்மா (அறிவு) என்றும் ஆனந்த ஸ்வரூபம்.

அந்த ஆத்மானுபவ நிலைபெற திருமுலர் பின்வருமாறு உபதேசிக்கின்றார்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை பட பட ஆய் வரும் துன்பம்
ஆசை விட விட ஆனந்தமாமே. - திருமந்திரம்.

என்றும் ஆசைகளற்ற மனமே ஆனந்தத்தின் நுழைவாயில் என்பதை நாம் நம் சத்குருவின் துணைக்கொண்டு அறிய வேண்டும்.

அவரது சத்சங்கத்தினால் உண்மை எது என்று அறிந்து ஆத்மாவை அறியும் அறிவே அறிவு என்பதைப் புரிந்து "நானே ஆத்மன், நானே பிரஹ்மம்" என்ற அத்வைத ஞானத்தினால், வேறு என்று ஒன்றில்லை, அதனால் வேண்டுதல் வேண்டாமை என்றுமே இல்லை எனும்

ஞான நிஷ்டையில் உலக வாழ்க்கையை கையாளுபவர் எவரோ, அவரே முழு இன்பத்தையும் அடைந்த சத்சிதானந்த சொரூபம் ஆவார்.

அப்படிப்பட்ட அந்த சத்சிதானந்தம் இந்த மனித சமுதாயத்தில், ஜாதி துவேஷத்தால் புலையனாகவோ, அல்லது பிராமணனாகவோ இருக்கட்டும் அவரே எனது "ஆசான்" என்பதே ஜகத்குரு ஸ்ரீஆதிசங்கரரின் திடமான நிச்சயிக்கப்பட்ட அறிவு ஆகும்.


**தேனுக்குள் இன்பம் கருப்போ சிவப்போ**
**வானுக்குள் ஈசனைத் தேடும் மதியிலீர்**
**தேனுக்குள் இன்பம் செறிந்திருந்தார் போல்**
**ஊனுக்குள் ஈசன் ஒளிந்திருந்தானே.** - திருமந்திரம்

**ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி!**

நிறைவுற்றது.

# மனீஷா பஞ்சகம்

(ஸ்ரீ ஆதிசங்கரர் அருளியது)



ப்ரக்ஞன்